தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜூனன்

மரம் 8 2007 டிசம்பர் கனி 1

## ஆசிரியர் கடிதம்...




***10.12.2007***

வாசகர் அனைவருக்கும் நேற்றும் இன்றும் என்றும் மாறா ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள்.

புதுவருடத்தை நோக்கி இருக்கிற நீங்கள் புத்துயிர் பெற ஜெபத்துடன் இக்கடிதத்தை எழுதுகிறோம். "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது" (நீதிமொழிகள் 20:27). இந்த ஆவியை அநேகர் அவித்துப்போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் வெளிச்சம் கொடுக்கிற ஒரு மெய்யான கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும். வருகின்ற புத்தாண்டில் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று மத்தேயு 5:14-ல் கர்த்தர் சொல்லியபடி வெளிச்சம் கொடுக்கிற கிறிஸ்தவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள். இவ்வருடம் முழுவதும் நம்மை வழிநடத்திய கர்த்தர் வருகின்ற வருடத்திலும் வழிநடத்துவார். கலங்காதிருங்கள். தேவனிடத்திலும் ஆண்டவர் இயேசுவினிடத்திலும் விசுவாசமாயிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

குறிப்பு: இவ்விதழ் தொடர்ந்து பெறவிரும்பினால் உங்களுடைய பதிவு எண்ணை புதுப்பிக்கவும். இவ்விதழை படித்தபின்பு மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள். அதுவே, நீங்கள் கர்த்தருக்குச் செய்யும் சிறப்பான ஊழியமாகும்.

ஆண்டவரின் பணியில்,
B.Arjunan & Glory




'ஒரே வழி' வேதபாடம்
The Master Course படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ
அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## *THE WORD OF CHRIST*

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 டிசம்பர் - 2007 கனி - 1


ஆசிரியருரை

## தேவன் நம்மை விட்டு ஏன் விலகுகிறார்?

## Why Does God Forsake Us?



இஸ்ரவேலை தமக்கு சொந்தமான ஜனமாக தெரிந்துகொண்ட தேவன் அவர்களை விட்டு விலகினார். ஏன்? என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. "அவர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சைபார்த்து, அவருக்குக் கோபம் மூட்டி, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற்போய், தங்கள் பிதாக்களைப்போல வழிவிலகி, துரோகம்பண்ணி, மோசம் போக்கும் வில்லைப்போல் துவண்டு, தங்கள் மேடைகளினால் அவருக்குக் கோபம் மூட்டி, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள். தேவன் அதைக் கேட்டு உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்து, தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி, தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்கொடுத்து, தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங் கொண்டார்" என்று ஆசாப் தமது சங்கீதத்தில் சொல்லியிருக்கிறார் *(சங்.78:56-72)*. இன்றைக்கும் தேவன் நம்மை விட்டு விலகுகிறார் என்றால் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். அவைகளை நாம் ஆராய்ந்து பார்த்து நம்மை சரிசெய்துகொள்ளவேண்டும். வருவது வரட்டும் என்று சிலர் சொல்லக்கூடும். நம்முடைய நண்பர்கள் நம்மை விட்டு விலகலாம் ஆனால் நம்மை நேசித்து, நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனையே ஒப்புக்கொடுத்த தேவன் நம்மை விட்டுவிலகுவாரேயானால் நாம் அநேக ஆசீர்வாதங்களை இழக்கநேரிடும்.

**இஸ்ரவேலர்கள் உன்னதமான தேவனைப் பரீட்சை பார்த்தார்கள்.** அவரை பரீட்சைபார்ப்பதற்கு மனிதன் எம்மாத்திரம்? அதை உணராது பரீட்சை பார்த்தார்கள். "அவர்களில் சிலர் கிறிஸ்துவைப் பரீட்சைபார்த்து, பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நாமும் கிறிஸ்துவைப் பரீட்சைபாராதிருப்போமாக. அவர்களில் சிலர்

முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்" என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிரூபத்தில் வாசிக்கிறோம் (1கொரி.10:9,10). தேவன் ஒருவனை விட்டு விலகுவதற்கு பல காரணங்கள் உண்டு அவைகளில் இதுவும் ஒன்று. தேவன் உங்களை விட்டு விலகாதிருக்க அவரை பரீட்சை பாராதிருங்கள். விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே என ரோமர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்.

**இரண்டாவது, அவருக்குக் கோபம் மூட்டினார்கள்.** பலவகைகளில் நாமும் தேவனுக்கு விரோதமாக ஈடுபட்டு கோபம் மூட்டுகிறோம். சவுல் இஸ்ரவேலில் முதல் ராஜா. அவன் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல் கொள்ளையின்மேல் விருப்பமுற்று கர்த்தருடைய கட்டளையை மீறி பாவம் செய்தான். ஆகையால் சாமுவேல் அவனைப்பார்த்து: "இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்த படியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்" (1சாமு.15:23). கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை ஒருவன் புறம்பே தள்ளும்போது அவருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறான்.

**மூன்றாவது, அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற் போனார்கள்.** "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" என்று ஏசாயா தீர்க்கன் மூலம் திருவுளம்பற்றுகிறார் (ஏசா.8:20). வேதாகமம் அநேக சாட்சியாகமங்களை உள்ளடக்கிய ஒரு புத்தகமாக இருக்கிறது. அது தேவனுடைய கட்டளைகளை வெளிப்படுத்தும் பரிசுத்த வேதமாக இருக்கிறது. இதை ஒருவன் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவனுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை. இதை அறிந்த இஸ்ரவேலர்கள் அதைக் கைக்கொள்ளாமற்போனார்கள். ஆகையால் தேவன் அவர்களை விட்டுவிலகினார். அப்போஸ்தலனாகிய யோவானும்; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" என்று எழுதுகிறார் (1யோவா.1:1,2). இவ்வளவு திரளான சாட்சிகள் நிறைந்த வேதாகமத்திற்கு திரும்புவது எவ்வளவு அவசியம்!

நான்காவது, தங்கள் பிதாக்களைப்போல வழிவில கினார்கள். ஆதாம் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் வழிவிலகி பாவம் செய்தான். லோத்து, யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். ஆகையால் அந்தப் பட்டணங்களில் வாசம்பண்ணி, சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகாபாவிகளுமாய் இருந்தார்கள். இப்படித்தான் அநேகருடைய தேர்வுகள் சரியில்லாமல் போய், முடிவில் வழிவிலகிபோய்விடுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சிலரும் பாரம்பரியமாக வருகிற முற்பிதாக்களின் வழியை தெரிந்து கொண்டு வீழ்ந்து போகிறார்கள். ஆனால் ஆபிரகாமுடைய தேர்வு எப்படிப்பட்டதாக இருந்தது? கர்த்தர் காண்பித்த இடத்தை தெரிந்துகொண்டான். அதனால் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான்.

ஐந்தாவது, துரோகம் பண்ணினார்கள். மனிதனுக்கு மனிதன் துரோகம் பண்ணுவான் அதைத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இஸ்ரவேலரோ கர்த்தருக்கே துரோகம் பண்ணினார்கள். தன்னை உண்டாக்கினவரை மறந்து அவருக்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தனர். ஆண்டவர் இயேசு பன்னிரெண்டு சீஷர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பெயரிட்டார். அதிலும் ஒருவன் துரோகியானான். அவனைக்குறித்து லூக்கா எழுதும்போது; "யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே" என்று எழுதுகிறார் (லூக்.6:16). இன்றைக்கும் திருச்சபையிலும் குடும்பங்களிலும் இந்த விதமாக துரோகியான யூதாசுகள் இருக்கிறார்கள். தன்னை பாவத்திலிருந்து மீட்கவந்த அந்த பரிசுத்த இரத்தத்தை காட்டிக்கொடுத்தானே என்றால் அது எப்படிப்பட்ட துரோகம்? இந்த விதமாக இஸ்ரவேலரும் தேவனுக்கு விரோதமாக துரோகம் பண்ணினார்கள்.

ஆறாவதாக, மோசம் போக்கும் வில்லைப்போல துவண்டுபோனார்கள். வேட்டையாடுகிறவனுக்கு வில் எவ்வளவு முக்கியம் அது துவண்டுபோனால் அதனால் அவன் வேட்டையாட முடியமா? இஸ்ரவேலர் இவ்விதமாக வில்லைப்போல துவண்டுபோனார்கள். உன்னதமான தேவன் இவர்களை வைத்து பெரிய காரியங்களை செய்ய திட்டமிட்டார். இவர்கள் ஒன்றுக்கும் உதவாமற்போகும் வில்லைப்போல துவண்டுபோய், நாங்கள் எகிப்திலே இருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி எகிப்தை பின்னிட்டு பார்க்க ஆரம்பித்தனர். அநேகர் இப்படித்தான் பின்னிட்டு பார்த்து லோத்தின் மனைவியைப்போல உப்புத்தூண்களாக மாறிக்கொண்டு வருகின்றனர். "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத்

தகுதியுள்ளவன் அல்ல" என்று ஆண்டவர் இயேசு சொல்லுகிறார் (லூக்.9:62). நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மோசம் போக்கும் வில்லைப் போல துவண்டு எதிராளி உங்களை மேற்கொள்ளும் அளவிற்கு போய் விட்டீர்கள் என்றால் தேவன் உங்களை விட்டு விலகினார் என்று அறியுங்கள்.

**ஏழாவதாக, தங்கள் மேடைகளினால் அவருக்கு கோபம் மூட்டினார்கள்.** தேவனுக்கு விரோதமான பாவங்களில் ஒன்று மேடைகளில் பலியிடுவது. இதைச் செய்து தேவனுக்கு கோபத்தை உண்டுபண்ணினார்கள். "இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்; யூதா அரணான பட்டணங்களைப் பெருகப்பண்ணுகிறான்; ஆனாலும் நான் அதின் நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்; அது அவைளின் கோவில்களைப் பட்சிக்கும்" என்று ஓசியா தீர்க்கன் மூலம் திருவுளம்பற்றினார் (ஓசி.8:14).

**எட்டாவதாக, தங்கள் விக்கிரகங்களினால் எரிச்சல் உண்டாக்கினார்கள்.** மிகப்பெரிய பாவம் விக்கிரக ஆராதனை இதை இஸ்ரவேலர் துணிந்து செய்தனர். மோசே தேவனுடைய சமூகத்திற்கு சென்று இருந்தபோது ஜனங்கள் அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டுபண்ணும் என்று சொல்லி ஒரு கன்றுக்குட்டியை உண்டாக்கி அதை நமஸ்கரித்தார்கள். "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்" என்றார் (யாத்.32:7).

இத்தனை பாவங்களையும் இஸ்ரவேலிலே கண்ட தேவன் அவர்களை மிகவும் வெறுத்து, தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையை சத்துருவின் கைக்கும் ஒப்புக் கொடுத்து, தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார். அன்பானவர்களே, இப்படிப் பட்டதான காரியங்கள் உங்களில் காணப்படுமானால் உன்னதமான தேவன் உங்களை விட்டுவிலகி சத்துருவாகிய பிசாசுக்கு உங்களை ஒப்புக்கொடுப்பார். தேவன் உங்களை விட்டுவிலகாதிருக்க வேண்டுமானால் வருகின்ற புதுவருடத்திலிருந்து புதிய தீர்மானங்கள் எடுத்து, கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள். "ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழுஇருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (யோவேல் 2:12). நீங்கள் மனந்திரும்பினால் தேவன் உங்களோடு இருப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.



# உபதேசத்தில் உறுதி

## Doctrinal Soundness

**J.C.Choate**

இந்தப் பாடத்தை படிக்கும்போது என்னோடு கூட நீங்கள் பிரசங்கியாரைப்பற்றியும், அவருடைய உறுதியான தெளிவான அறிவைப்பற்றியும் சிந்தியுங்கள். நாம் கிறிஸ்துவின் உபதேசத்தைப் பற்றியும், அதற்கு ஒருவர் தன்னை அர்பணிப்பதைப் பற்றியும் பேசுகிறோம்.

மெய்யாகவே வித்தியாசப்பட்ட உபதேசங்களோடும் நடைமுறைகளோடும் அநேக சபைகள் இருக்கின்றன அவர்கள் தங்களுக்கென்று சொந்த பிரசங்கியாரையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் அல்லது இவைகளை குறைவாகவும் கொண்டிருப்பார்கள். மேலும் அநேக மத சம்பந்தப்பட்ட கூட்டங்களுமுண்டு. ஆனால் அவைகளில் ... ஒன்றிலாகிலும் நமக்கு ஆர்வமில்லை. ஆனால் நாம் வேதம் என்ன போதிக்கிறதோ அந்தப் போதனைபடி விசுவாசத்தில் நடப்பதிலும் அதைப் பிறருக்கு அறிவிப்பதிலும் ஆர்வமாக இருக்கிறோம்.

ஒரு பிரசங்கியார் உபதேசத்தில் உறுதியுள்ளவராயிருக்க வேண்டுமானால், அதாவது அவருடைய நம்பிக்கையிலும் வேதம் என்ன போதிக்கிறது என்பதைப் பிரசங்கிப்பதிலும்...உறுதியுள்ளவராயிருக்க வேண்டுமானால், இயல்பாகவே இரட்சிக்கப்படும்படியாக கர்த்தருக்கு அவர் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சபையிலே கிறிஸ்துவானவராலே சேர்க்கப்பட்டவராகிறார் என்பதை விசுவாசிக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தனக்கு தானே செய்துகொள்ளாத ஒன்றை அவர் எப்படி மற்றவர்கள் செய்யும்படி பிரசங்கிக்க முடியும், ஒரு வாடகைப் பிரசங்கியாரே அப்படிச்செய்ய முடியும் ஆனால் வாடகை பிரசங்கியார் வேதத்தின் பார்வையிலே குற்றவாளியாகயிருக்கிறபடியால் கர்த்தருடைய ஜனங்களால் நிராகரிக்கபடவேண்டும்.

அப்படியானால் ஒருபிரசங்கியார் சுவிஷேசத்தைக் கேட்டு அதை விசுவாசித்து தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அல்லது பாவங்கள் மன்னிக்கப் படும்படியாக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டவராயிருக்கிறார் *(மாற்கு 15:15-16; லூக் 13:3; மத் 10:32; அப்2:38)*. இவைகளைச் செய்த பின்பு வேதத்திலே சொல்லப் பட்டுள்ள கிறிஸ்துவின் ஒரே சபையிலே கர்த்தரே அவரை சேர்க்கிறார் *(அப் 2:47; எபே 4:1-6; கொலோ 1:18)*. இப்பொழுது அவர் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சபையில் அங்கத்தினராகி

விட்டார். அவர் கிறிஸ்தவராக வாரத்தின் முதல் நாளிலே தேவனைத் தொழுது கொள்ளும்படி ஆயத்தமாக இருந்து கிறிஸ்தவராக ஜீவிக்கிறார்.

ஒரு கிறிஸ்தவராக இந்த மனிதன் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க தீர்மானிக்கிறார் இந்த வேலைக்கு தேவைப்படுவது என்ன? இதன் அர்த்தம் என்ன வென்றால் அவர் வேதத்தை போதுமான அளவிற்கு கற்று தன்னைத் தானே ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தையை அறிந்து அவர் சித்தத்தைப் புரிந்து அதோடு எதையும் கூட்டாமலும் அதிலிருந்து எதையும் குறைக்காமலும் அல்லது அதற்கு மாறாக எதையும் சொல்லாமலும் மற்றவர்களுக்கு போதிக்கதக்கதாக புரிந்து செயல்படுபவராக இருக்க வேண்டும் (வெளி *22:18-19; கலா 1:6*). கிறிஸ்துவினுடைய உபதேசங்களின்படியும், போதனைகளின்படியும் நடக்க வேண்டும் என்பதன் ஜாக்கிரதையை அவர் உணர்ந்தவராயிருக்க வேண்டும். துவக்க காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றி பின் வருமாறு வாசிக்கிறோம். "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப் *2:42*). அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்த அப்போஸ்தல உபதேசங்கள் கிறிஸ்துவின் போதனைகளே. அப்போஸ்தலனாகிய யோவான் பின்வருமாறு சொல்கிறார். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிறஎவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (*2*யோவான் *9*). யாக்கோபு சொல்கிறார். "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்" (யாக் *1:25*). இந்த வேத வாக்கியங்களை நாம் படிக்கும்போது எளிதாகக் காண்பது என்ன வென்றால் ஒரு பிரசங்கியாரோ அல்லது கிறிஸ்தவனோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் உபதேசத்திலும் போதனையிலும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே. மேலும் வேத வாக்கியங்களை போதிப்பதில் ஒருவன் இந்த விதமாக செய்யாவிட்டால் தேவன் அவனோடிருந்து அவனை ஆசீர்வதிக்கமாட்டார் என்பதே.

தீமோத்தேயு, மற்றும் தீத்துவோடு பவுல் பேசும்போது ஆரோக்கியமான உபதேசத்தைக் குறித்தும் ஆரோக்கியமாகப் பேசுவதைக் குறித்தும் மற்றும் பிறவற்றையும் குறிப்பிடுகின்றார். 1 தீமோ*1:10*-ல் பவுல் கொலை, ஒழுக்கக்கேடு, பொய்ச்சொல்லுதல் ஆகியவற்றை ஆரோக்கியமான உபதேசத்திற்கும் போதனைக்கும் எதிரானது என்று பட்டியலிடுகின்றார்*2*தீமோ *1:13*-ல் அவர் வலியுறுத்திச் சொல்வது "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு".

மறுபடியும் ஆரோக்கியமான போதனை என்றால் அது தேவனிடத்திலிருந்து வரும் போதனையே. தீத்துவுக்கு அவர் போதகனுடையவேலையைச் செய்வது பற்றி பவுல் பின்வருமாறு சொல்கிறார். "அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான். இந்த சாட்சி உண்மையாயிருக்கிறது; இது முகாந்தரமாக, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல், விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய் கடிந்துகொள். சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களு மாயிருக்கிறார்கள்" *(தீத்து 1:10-16).*

பவுல் தொடர்ந்து சொல்வது "ஆரோக்கியமான உபதேசத்துக்கு ஏற்றவைகளைப் பேசு" *(தீத்து 2:1).* முதிர்வயதுள்ள புருஷர்களுக்கும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்கும் வாலிப ஸ்திரீகளுக்கும், இளைஞனுக்கும் அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி எப்படி போதிக்க வேண்டுமென்று தீத்துவுக்கு ஆலோசனை சொன்னபின்பு அதைப் பின்வருமாறு சொல்லி நிறைவு செய்கிறார்...*(தீத்து 2:8).* மேலும் அவர் சொல்லுகிற புத்திமதி பின்வருமாறு "தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு, ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த

ஜனங்களாக்வும் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர் களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக" (தீத்து 2:10-16).

மேலும் 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து மற்றும் இது போன்ற நிருபங்களில் நாம் தொடர்ந்து ஆரோக்கியமான உபதேசத்தில் விசுவாசமாயிருப்பதிலும் வார்த்தையிலும் நன்னடைத்தையிலும், மற்றவர்களோடு பழகுவதிலும், மேலும் போதிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து வாசிக்கலாம்.

ஆகவே பிரசங்கியார்கள் மற்றவர்களுக்கு போதிக்கும்படியான நல்ல வேலையை செய்யும்படியாக வேதத்தை நன்கு படித்து அது என்ன போதிக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டிலும், யூதர்களுடைய சரித்திரத்திலும் பிரமாணங் களுக்கு இடையில் உள்ள வித்தியாசங்கள், பழைய ஏற்பாட்டு சட்டம் ஏன் நடைமுறையில் இல்லை மேலும் புதிய ஏற்பார்ட்டு சட்டம் இன்றைக்கு மனிதர்களை கட்டுப்படுத்துவதாக ஏன் இருக்கிறது என்பதிலும் ஒருவர் நன்கு கற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (எபி 9-10 அதிகாரம்). பிரசங்கியார் சுவிசேஷத்தைக் குறித்தும், இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்தும் அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள மன மாற்றங்களைக் குறித்தும் மேலும் கர்த்தருடைய சபை மற்றும் அதனுடைய அமைப்பு ஆகியவற்றைக் குறித்தும் நன்கு புரிந்தவராக இருக்க வேண்டும் (1கொரிந் 15:1-4;மாற்கு 16:15-16; எபே 5 அதிகாரம்).

மேலும் ஒரு பிரசங்கியார் வேதத்தினுடைய உண்மையையும் போதிக்கும்படியாக வேதத்திலே கண்டிப்பாகக் கற்று தேர்ச்சி பெற வேண்டிய அநேகமுண்டு. அதே சமயத்தில் அவர் கள்ள போதனையைக் குறித்து எச்சரிக்கையுள்ளவராக அதை அன்போடும் உறுதியோடும் கண்டிப்பாக எதிர்க்க வேண்டும்.


**ஜெபியுங்கள்**

- ☆ உலக அமைதிக்காக...
- ☆ அடுத்தமாதம் புதிய மாவட்டத்தில் நடைபெறவுள்ள 29—வது வாசகர் கருத்தரங்கிற்காக...
- ☆ புதிதாக வெளி வந்துள்ள 2005—2006 ரேடியோ மற்றும் டிவி செய்திகள் அடங்கிய புத்தகத்திற்காக...
- ☆ புத்தாண்டு ஆசீர்வாதத்திற்காக...



# BATLAGUNDU CHURCH OF CHRIST MEETS HERE

## வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்





Bro. Arjunan



Sis. Glory Arjunan

## 2008 சிறப்பிதழ்

கிறிஸ்துவின் சபையார்

உங்களை வாழ்த்துகிறார்கள் ரோமர் 16:16


THE VOICE OF TRUTH INTERNATIONAL
RESTORATION RADIO NETWORK INTERNATIONAL
GOSPEL SERMONETTES
J. C. Choate
எங்களது வெளியீடுகள்
Christian Leadership Training Course
2005 - 2006
வேதாகம சபை
THE CHURCH OF THE BIBLE
OF THE LORD
THE ONE WAY
Roger Dickson
Starting A Church
பகுதி - VI
RADIO MESSAGE
By The Word of Christ

# THE WORD OF CHRIST

## A.D. 2008

*I am the bread of life*

John 6:48

### JANUARY

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### FEBRUARY

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | |

### MARCH

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### APRIL

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### MAY

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

### JUNE

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

# THE WORD OF CHRIST

## A.D. 2008

*I am the bread of life*

John 6:48

### JULY

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

### AUGUST

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 31 | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### SEPTEMBER

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

### OCTOBER

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### NOVEMBER

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

### DECEMBER

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |


## The Word of Christ

P.O. Box No. 5, BATLAGUNDU - 624 202, South India.

Ph : 04543 - 263278, Mobile : 94435 58041

E-mail : thewordofchrist@sancharnet.in

# காட்சி – Perspective



இருபது ஆண்டுகளுக்கு முன் வீடு ஒன்றினை
நாம் கனா கண்டோம்.
ஆண்டுகளெல்லாம் பேச்சு,
திட்டம்,
மாதங்களெல்லாம் வியர்வையும் உழைப்பும்
கனவை மாற்றின
முழுமையான உண்மை நிலைக்கு
மதிலோடும், சன்னல்களோடும், தளங்களோடும் கதவுகளோடும்.
நமது வீடு .....
ஆனால் நாம் தாராளமாக கடனாய்கொடுத்தோம் நமது வீட்டை தேவனுக்கு
அவ்வாண்டுகளெல்லாம், சொந்தக்காரரின் சந்தோஷம் இனிமையாயிருந்தது
அப்புறம் திகில்:
தீ! தீ!
தீவாலைகள், தாவின, நக்கின, டமார் சப்தம்,
நமது வீட்டை விழுங்கியது
நமது பொருட்கள்,
நமது வாழ்வு –
அளவில் ஒரு அரக்கன் யாராலும் நிறுத்த முடியல:
எல்லாம் – எல்லாம் நம்மால் அன்பு கூரப்பட்ட பொருட்கள், எல்லாம்
நம்மால் அறிப்பட்டவை மேலும் சொந்தமானவை
அவைகள் நம்முடையதல்ல கொஞ்சமும் இனி;
பூரண பயம் திகில் நிரப்பிற்று என் இருதயத்தை
அதன்பின், முடிவில், ஏற்றுக்கொள்ளல்:
மூர்க்கமான தீ எரித்துபோட்டது எனது உலகத்தை
கொடூர தோல்வியின் பயங்கரமான அந்நேரத்தில்
அனுமதித்தேன் அது கடந்து செல்ல.
இப்போ, எப்பேர்பட்ட புதுமையான உணர்வு என் இருதயத்தில்
நான் வண்ணம்பூசி மெருகேற்றியது போல்,

தீர்மானங்கள் உருவாகி, அளவு குறைந்து,
மேலும் உழைப்பு
நிலைமாறிய மதில்கள் மேலெழுந்தன
மரித்தோர் சுடுகாட்டின் மேல்
ஒருசமயம் நம்முடையதாயிருந்த வீட்டினது,
நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன் எப்போதும்
அதாவது இந்த கருவி ஆயத்தமாக்கப்பட்டிருந்தது எப்போதும்
தேவனுடைய கரங்களில் தேவையான சமான்கள் போல்;
இந்த மதில்கள் – இந்த விளக்கு – இந்த ஆசனங்கள்
அனைத்தும் அவருடையவை;
ஆனால், குறுகிய கால கட்டத்திற்கு,
அவைகளைக் கொடுக்கின்றார் அவர் இரவலாக நமக்கு
கண்காணிகளாக,
கவனிக்க அவருக்கென பயன்படுத்த.
நான் சொந்தமாகக் கொள்ளவில்லை சிறிதளவும்
என்னை சொந்தமாக்கிக்கொள்ளவில்லை ஒருபொருளும்

***-Betty Burton Choate***

## நட்புச் செய்திகள்

- உலகில் செல்போன்கள் அதிகமாக விற்பனையாவது இந்தியாவில்தான். இங்கு மூன்று மாத்தில் 2.5 கோடி செல்போன் விற்பனையாகி உள்ளது.
- சாமியானா பந்தல் உபயோகம் அதிகரித்து வருவதால் கிடுகு பின்னும் தொழில் நலிவடைந்து வருகிறது.
- தீவிரவாதத்தை ஒடுக்க மாநில முதல்வர்கள் மாநாடு கூட்டப்படும் என்று உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் கூறியுள்ளார்.
- பூமி வெப்பம் அதிகரிப்பதால் இந்தியாவில் கடுமையான தண்ணீர் பஞ்சம் வரும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.
- 31 வது மாவட்டமாக அரியலூர் மாவட்டம் தமிழகத்தில் உதயம்.



# அன்றும் இன்றும்

## Yesterday and Today

*J.Glory Arjunan*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே வாழ்க! ஒருவர் இன்னொருவரை மனதார வாழ்த்தும் போது அது மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். பொதுவாக ஜனங்கள் தங்கள் தங்கள் விசேஷநாட்களில் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்வர். ஆனால் அவர்களெல் லோரும் தங்கள் மனங்குளிர வாழ்த்துகிறார்களா என்பது கேள்விக்குறியே! காரணம் உண்மையான அன்பு அவர்களிடம் காணப்படுவதில்லை. சிலர், தங்கள் வாயினால் ஆசீர்வதித்து தங்கள் உள்ளத்தில் சபிக்கிறவர்களா யிருக்கிறார்கள். பரிசுத்த வேதாகம் இவ்வாறான மாய்மாலமான காரியத்தை விரும்புவதில்லை. மாறாக "ஆசீர்வதிக்க வேண்டியதேயல் லாமல் சபியாதிருங்கள்" என்ற கிறிஸ்துவின் வசனத்தைத் தாங்கியே இருக்கிறது. வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தினவர்களின் பட்டியலில் இதோ...

★ **தேவதூதனின் வாழ்த்து:** "...கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்" காபிரியேல் என்னும் தேவதூதன் *(லூக்.1:28)* என்ன அருமையான வார்த்தை இது! 'வாழ்க' என்ற ஒரே ஒரு வார்த்தை மரியாளுக்கு தேவகிருபையைக் கொண்டு வந்தது. அன்று வந்த அந்த கிருபையினாலே இன்று நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபாசனத்தண்டை சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். அந்த கிருபாசனத்தண்டைக்கு வந்து சேரும்படி இன்று மற்றவர்களை வாழ்க என வாழ்த்தி வரவழைப்போமா?

★ **மரியாளின் வாழ்த்து:** தேவதூதனால் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாள், "...எலிசபெத்தை வாழ்த்தினாள்" *(லூக்.1:41)*. இந்த வாழ்த்துதல் எலிசபெத்துக்கு மனமகிழ்ச்சியைக் கொண்டு வந்ததா? ஆம், அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை கூட துள்ளுமளவிற்கு மரியாளின் வாழ்த்துதல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. அதுமாத்திரமல்ல, "...எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்..." என்று மரியாளை நோக்கி கூறி, மேலும், "விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" *(லூக்.1:42-45)*. பாருங்கள், ஒருவருக்கொருவர் மனதார வாழ்த்தியிருக்கிறார்கள். ஸ்திரீகளாகிய அவர்களிடையே ஸ்திரீகளுக்கேயுரிய பொறாமை குணம் காணப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' *(1கொரி.13:4)*.

எனவே அன்று வாழ்த்துதல் சொல்லுவதில் முந்திக்கொண்டாள் மரியாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம்!

★ **இயேசுவின் வாழ்த்து:** "...இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார்..." (மத்.28:9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்த ராஜாதி ராஜா தம்மைத் தேடி வந்த ஸ்திரீகளுக்கு வாழ்த்துக் கூறியிருக்கிறாரென்றால் நாம் எம்மாத்திரம்! என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆம், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற சகோதரிகளாகிய நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரிகளை மனங்குளிர, கள்ளங்கமில்லா இதயத்துடன் வாழ்த்த வேண்டியது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனால் அநேக நேரங்களில் சபை அங்கங்களாகிய நம்முடைய சகோதரிகளை நாம் மனதார வாழ்த்துவது கிடையாது. காரணம், நமக்குள் வாசஞ்செய்கின்ற பல்வேறு பாவங்கள். இன்னும் சில நேரங்களில் மற்றவர்கள் மேலுள்ள ஆசீர்வாதங்களைக் கண்டு பொறமைப்பட்டு வாழ்த்துதல் சொல்லுவதில்லை. வருகிற நாட்களிலாவது நம்முடைய சுயத்தை சுட்டெரித்துவிட்டு இயேசுவின் சுபாவத்தைப் பற்றிக்கொண்டு வாழ்த்துவோமா?

★ **சீஷர்களின் வாழ்த்து:** இயேசுவின் பின்னே சென்ற சீஷர்கள் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். இயேசு சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பினபோது அவர்களை நோக்கி: "ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக வென்று முதலாவது சொல்லுங்கள்" (லூக்.10:6) என்று சொல்லி அனுப்பினார். கிறிஸ்துவுக்குள்ளான நாம் எங்கு சென்றாலும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகவே இருக்கவேண்டும். அன்று ஒரு அடிமைப்பெண்ணின் மூலம் சீரிய தேசத்திற்கு இரட்சிப்புவந்தது. கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருந்த அந்த அடிமைப் பெண் தன் எஜமானின் குஷ்டம் நீங்க வழியைக் காண்பித்தாள். அவள் தன் எஜமாட்டியைப் பார்த்து தன் எஜமான், எலிசா தீர்க்கதரிசியினிடத்திற்குப் போனால் அவனுடைய குஷ்டரோகத்தை தீர்க்கதரிசி நீக்கிவிடுவார் என்று (2இராஜா.5:3) கூறினாள். தன் அடிமைத்தனத்தை நினைத்து பயந்து கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்கு நேராக நாகமானை வழிநடத்தி அதனிமித்தம் சீரியாவுக்கு இரட்சிப்பு வரக்காரணமானாள். நாகமானின் குஷ்டரோகம் நீங்கி அவன் "...உமது அடியேன் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை" (2இரா.5:17) என்றான். அன்று அந்த அடிமைப்பெண் நாகமானின் வீட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு சென்றாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம். இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம். பிறர் வாழ வாழ்த்துவோம்.

★ *கிறிஸ்துவின் சபையாரின் வாழ்த்து:* புத்தாண்டைக் காண ஆவலாயிருக்கும் கிறிஸ்துவுக்குள்ளான அன்பு சகோதரிகளே, 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (*ரோம.16:16*). கிறிஸ்து தாமே தம்முடைய சுயரத்தத்தை சிந்தி சம்பாதித்துக் கொண்ட மந்தையில் ஒரு அங்கமாகி கிறிஸ்துவின் சபையாரோடுகூட நீங்களும் மற்றவர்களை வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துங்கள். அன்று வாழ்த்தினவர்களை மாதிரியாக கொண்டு இன்று நாம் மற்றவர்களை வாழ்த்துவோமாக! கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.

## பொது அறிவுச் சோதனை

1. தமிழ் நாட்டின் தற்போதைய கவர்னர் யார்?
   அ)ராம்மோகன்ராவ் ஆ)என்.டி.திவாரி இ)எஸ்.எஸ்.பர்னாலா
2. யானைகவுளி இருப்பது இலங்கையில். யானைக்கு குகைகள் எங்கே உள்ளது?
   அ)ஒரிசா ஆ)மகாராஷ்டிரா இ)கேரளா
3. 'மார்ச்' என்னும் ஆறுபாயும் நாடு எது?
   அ)செக்குடியரசு ஆ)பிரான்ஸ் இ)டென்மார்க்
4. மனித உடலில் சிறு நீரகத்தில் கல்போன்று படிந்துள்ள பொருள் யாது?
   அ)பொட்டாசியம் ஆக்சலேட் (ஆ)ஆக்ஸாலிக் அமிலம் இ)கால்சியம் ஆக்சலேட்
5. ஆசியாவில் மிகப்பெரிய மரம் அறுக்கும் தொழிற்சாலை எங்குள்ளது?
   அ)கேரளா (ஆ)இலங்கை (இ) அந்தமான்

விடைகள்:1.எஸ்.எஸ்.பர்னாலா 2.மகாராஷ்டிரா 3.செக்குடியரசு 4.கால்சியம் ஆக்சலேட் 5.அந்தமான்

### பொது அறிவுப் போட்டி எண் 87-ல் வெற்றிபெறுபவர்கள்

| | |
|---|---|
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| A. ஆனந்த் | -நாகமலை |
| P.அலிஸ்மேரியம்மாள் | -வதிலை |
| S. தண்டபானி | -சிலுவத்தூர் |
| I. ஐசக் | -திருநெல்வேலி |
| C.H. வித்யாராணி | -சென்னை |
| N.ஜான் செல்லையா | -திருவாதவூர் |
| M.புகழரசு | -குடியாத்தம் |
| K.P.தானியேல் | -குடியாத்தம் |
| P.S. லலிதாபிரேமகுமாரி | - மதுரை |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| T.S.வின்சென்ட் | -ஈரோடு |
| G.பூங்கோதை | -வெ. பாளையம் |
| R.அருண்குமார் | -பிடாரியூர் |
| G.ஏசையன் | -கோபி |
| S.சசிகுமார் | -மணலி |
| A.ஜோதிகாந்தம் | -போடபாறை |
| V.கோவலன் | -மதுரை |
| N.கமலவேணி | -சென்னை |
| K.M.ஜான் | -கரடிகுளம் |
| D.யேசுதாஸ் | -சித்தூர் |
| B.சுந்தர் யோசுவா | -சோழபுரம் |

### பொது அறிவுப் போட்டி எண் 87-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.சத்தியத்தாலும் | -3யோ.12 |
| 2.சவுல் | -1சாமு.15:19 |
| 3.கிறிஸ்துவைத் | -கலா.3:27 |
| 4.போவாஸ் | -ரூத்2:14 |
| 5.மனுபுத்திரருக்கு | -எபே.3:6 |
| 6.தெலீலாள் | -நியா.16:18 |
| 7.பவுல் | -பிலி.3:18 |
| 8.ஆகான் | -யோசு.22:20 |
| 9.திருப்பப்பட்டிருக்கிறீர்கள் | -1பேது.2:25 |
| 10.மோசே | -யாத்.34:20 |

BIBLE THEMES

# 1. வேதாகமம் - The Bible

***J.C.CHOATE***

வேதாகமம் புத்தகங்களின் புத்தகம்; இது மனிதவரலாற்றையும், நன்மை தீமையினையும் தாங்கியுள்ளது; இது அவனுடைய தற்கால நிலையை வெளிப்படுத்துகிறது, மேலும் மரணத்திற்கு அப்புறம் ஒரு வாழ்க்கை உண்டென உறுதிப்படுத்துகிறது.

வேதாகமம் 66 புத்தகங்களால் ஆனது, இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: 39 புத்தகங்களைத் தாங்கிய பழைய ஏற்பாடு, 27 புத்தகங்களைத் தாங்கிய புதிய ஏற்பாடு.

வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜமுள்ளவைகளாயிருக்கிறது" *(2தீமோ.3:16,17))*. வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறபடியினால் நாம் இதனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் நம்பவேண்டியவர்களாயிருக்கிறோம். அத்தோடுகூட அதற்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாகவுமிருக்கிறோம்.

வேதாகமம் தம்மிலே தாமே போதுமானதாகவும் பூரணமுடையதாகவுமிருக்கிறது. இத்தோடு ஒன்றும் சேர்க்கப்பட கூடாது, இதிலிருந்து ஒன்றும் குறைக்கப்படவும் கூடாது அல்லது எவ்வழியிலும் இதற்கு ஈடாக ஒன்றும் செய்யப்படவும் கூடாது *(வெளி.22:18,19; கலா.1:7-9)*. அடுத்தாற்போல், பேதுருவுக்கு செவிகொடுங்கள்: "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" *(1பேது.4:11)*.

வேதாகமம் நற்செய்தியினால் நிரம்பியுள்ளது. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷ புத்தகங்கள் தேவனுடைய குமாரனாகிய மேசியாவின் வருகையைக் குறித்து சொல்லுகின்றது. இந்த புத்தகங்களை வாசிக்கிற, கற்றுக்கொள்ளுகி ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி நடத்தப்பட முடியும். அதன்பின் அப்போஸ்தலர் நடபடிகளுக்குத் திரும்புகையில், அவன் எவ்வாறு கர்த்தருக்குக் கீழ்ப்படிவது என்றும் எவ்வாறு சபையில் சேர்க்கப்படுவதும் என்றும், கற்கக்கொள்ள முடியும் *(அப்.2.)*. இதற்கும்மேலாக, வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் வரப்போகிற காரியங்களைப் படம்பிடித்துக் காண்பிக்கையில், 21 நிருபங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றி விவரிக்கிறது.

வேதாகமம் உண்மையை உள்ளடக்கியுள்ளது. இதைப்போன்று சிறப்பாகவிற்பனையாகும் புத்தகம் ஒருபோதும் இருந்ததில்லை. இதுபோன்று தொடர்ச்சியாக இருக்கும் புத்தகம் ஒன்றுமில்லை. இந்த புத்தகத்தை வாசியுங்கள், கற்றுக்கொள்ளுங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் சொல்லுகின்ற மற்றும் செய்கின்ற எல்லாவற்றிற்கும் இது உங்களுடைய வழிகாட்டியாக இருக்கட்டும்.

சிறுவர் பகுதி

# நற்செய்தி
# Good News

**வேதபகுதி:லூக்கா2:1-20**



நற்செய்தி என்றாலே எல்லோருக்கும் சந்தோஷந்தானே, ஆம் எல்லோருக்கும் சந்தோஷம்தான். இன்றைக்கு நான் சொல்லப்போகிற நற்செய்தி உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட உன்னதமான நற்செய்தி. அது எப்பொழுது என்றுதானே கேட் கிறீர்கள். இயேசுகிறிஸ்து பிறப்பின் போது தேவதூதனாலே மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி. பிரதர், அந்த நற்செய்தியை கொஞ்சம் சொல்லுங்க என்கிறீர்கள் அப்படித்தானே. இதோ சொல்லத்தானே இங்கே வந்திருக்கிறேன்.

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அப்பொழுது யோசேப்பு தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். எப்படியிருந்திருக்கும் இல்லையா? கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

**தேவதூதன் அவர்களை நோக்கி:** பயப்படாதிருங்கள்; இதோஎல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக்

காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தநேரமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்தாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய்வந்து, மரியாளையும், யோசேப்பையும், முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப் பட்டதின்படியே கேட்டு, தாங்கள் கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.

இயேசுவின் பிறப்பு மனிதர்களாகிய நம் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்ற ஒரு பெரிய நற்செய்தியே. இந்த நற்செய்தியை தேவதூதர் முதலாவது மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்தநேரத்தில் பரம சேனையின் திரள் அந்த தேவ தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனை துதித்தார்கள். மேய்ப்பர்களும் சென்று தங்களுக்கு சொல்லப்பட்ட தின்படியே கேட்டு, கண்ட எல்லாவற்றிக்காகவும் தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டு திரும்பினார்கள். 2000 ஆண்டுகளுக்கு பின்னால் இருக்கிற நமக்கும் அது நற்செய்தியே. அவர் மனுஷனாக பிறந்து நமக்காக மரித்ததினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. நாமும் அவர் மூலமாய் இரட்சிக்கப்படுகிறோம்.

**மனப்பாட வசனம்**

*"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவளுக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்.1:21)*

இயேசுவின் பிறப்பு உலகிற்கு கிடைத்த நற்செய்தி.
அதை ஒரு பண்டிகையாக கொண்டாடாமல், பாவத்திலிருக்கும் மனிதனை மீட்க வந்தவர் ஆண்டவர் இயேசு ஒருவரே என்பதை உலகிற்கு எடுத்துச்சொல்லுவோம்!

# வேத அறிவுப் போட்டி எண். 88

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***


***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ந்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், யாருடைய கடிந்து கொள்ளுதலைக் கேட்பது நலம்?
2. இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன்கொடுத்து, சத்துவமில்லாதவனுக்கு எதைப் பெருகப்பண்ணுகிறார்?
4. தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் எவரால் அறியப் பட்டிருக்கிறான்?
5. சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் உரைக்கிறார்?
6. இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களா யிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் எப்படியிருக்கிறோம் என்று பவுல் எழுதுகிறார்?
7. ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தை எதைப்போல ஊற்றிவிடு?
8. யூதர்களுடைய மாயத்தினாலே இழுப்புண்டவன் யார்?
9. எவர்கள் தங்கள் முதுகைக் கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தைக் கீழ்த்திசைக்கும் நேராகத் திருப்பினவர்களாய்க் கிழக்கே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்?
10. தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே எவருக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்?

"மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16)

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batagundu - 624 202 and printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlgundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I. No. TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post Without Pre-Payment License No. TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th December 2007.



**ஆராதனை நேரம்**

ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும்,
உண்மையோடும்,
தொழுது கொள்ள
யாவரையும் அன்புடன்
அழைக்கிறோம்.

# BATLAGUNDU CHURCH OF CHRIST

## MEETS HERE

17-2-102 D/5, Rajan Nagar
BATLAGUNDU - 624 202.
Dindigul Dist.,
Phone : 04543 - 263278, Mobile : 94435 58041

Monthly Magazine

To

From

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box No. 5,*
*Batlagundu - 624 202*
*S.India.*